விடுதலைப்புலிகள்

குரல் 89 சித்திரை - வைகாசி 1999 அன்பளிப்பு 5/=

உள்ளே

- ★ [illegible]
- ★ வீரத்தின் வித்துக்கள்
- ★ போர் எந்தக் கட்டத்தில் உள்ளது!
- ★ எங்கள் பட்டினிக்கும் பதில் உண்டா?
- ★ [illegible] பூகேருக தேர்தல் களத்தில் "மைமோலை" யுக
- ★ குருதிச்சுவடுகள்
- ★ கவிதை
- ★ உலகக்களம்

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் படையினரின் சதிச்செயல்கள்

சோதனைச் சாவடிகளாலும் - சுற்றிவளைப்புத் தேடுதல்களாலும் - ஊரடங்குச் சட்டங்களாலும் குடாநாட்டு மக்களை சிறைக்கைதிகளாக வைத்திருந்த சிங்களப்படைகள், இப்போது, அடையாள அட்டைத் திட்டம் மற்றும் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முயற்சிகள் என்றுமென் மேலும் தமிழ் மக்களை இம்சிக்கத் தொடங்கியுள்ளன. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதியிலும் இத்தகைய ஆட்சேர்ப்பு முயற்சிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் இந்தியப் படைகள் தமக்கு உதவியாக ஒரு துணை இராணுவப் படையை தமிழ் இளைஞர்களை இழுத்து போல, இப்போது, சிங்களப் படைகளும் இராணுவத்திற்கு தமிழ் இளைஞர்களைச் சேர்க்கும் முயற்சி என்ற போர்வையில் ஒரு துணை இராணுவப்படையை அமைக்க முயற்சிகளை மேற்கொள்கின்றன.

முதற்கட்டமாக எந்தவொரு தமிழ் இளைஞரும் சிங்களப் படையில் இணைய முன்வரவில்லை என செய்திகள் கூறுகின்றன. இந்தியப் படைகளின் முயற்சியும் முதலில் தோல்வி கண்டிருந்தது. அதன் பின்னரே பலவந்தமாக இளைஞர்களைப் பிடித்து கட்டாய இராணுவப் பயிற்சி கொடுத்து - புலிகளுக்கு எதிராக சண்டையிடும்படி ஆள்களை நிர்ப்பந்தித்திருந்தது.

இதேபோன்று அடுத்தடுத்த கட்டங்களில் சிங்களப்படையும் பலவந்தமாக தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்க முயற்சிகளை மேற்கொள்ளலாம் என அஞ்சப்படுகின்றது. இந்த முயற்சிக்காக ஏற்கெனவே இராணுவத்திற்கு ஆணையிடவும் தமிழ்க்குழுக்களின் சந்தை பயன்படுத்தவும் இராணுவ தலைமைப்பீடம் திட்டமிடலாம் எனவும் சந்தேகப்படுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இன்னொரு நகரான வவுனியாவில் தமிழ்க்குழுக்கள் இந்த பலவந்த ஆட்சேர்ப்பை சிறிய அளவில் ஆரம்பித்துவிட்டதாக வவுனியா சென்று வரும் வன்னிவாழ் மக்கள் ஆதாரங்களுடன் தகவல் கூறுகின்றனர்.

இந்தியப்படைகள் செய்ததைப் போல ஒரு தமிழ்க்குழுவை மட்டும் பலவந்த ஆட்சேர்ப்பிற்கு பயன்படுத்தியதைப்போலில்லாது, சிங்கள இராணுவத் தலைமைப்பீடம், மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தமிழ்க்குழுக்கள் என்ற ரீதியில் பலவந்த ஆட்சேர்ப்பிற்கு பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழ் இளைஞர்களை பலிக்கடாக்கள் ஆக்கும் இந்த சதித்திட்டம் அங்கே வசிக்கும் மக்களை கிலிகொள்ளச் செய்துள்ளது.

இதேவேளை, கொழும்பில் தமிழ் மக்களை அடையாளங்காட்டவென விசேட அடையாள அட்டைத்திட்டம் அமுல் செய்த சந்திரிகா அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் வயது ரீதியாக மக்களை வகுத்து ஒவ்வொரு பகுதியினருக்கும் வேறு வேறு அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த வகையான அட்டைத் திட்டங்கள் முற்றுமுழுதாக இளைஞரை நோக்கம் கொண்டவை.

ஏற்கெனவே பயங்கரவாதத்தடைச் சட்டத்திலுள்ள கொடூரமான சரத்துக்களால் சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்துவரும் தமிழ்மக்கள் இந்த அடையாள அட்டைத்திட்டங்களினால் மென் மேலும் வாழ்வியல் துன்பங்களையும் உயிர் ஆபத்துக்களையும் எதிர்கொள்ளப் போகின்றனர்.

இவையெல்லாம் சிங்கள மரபின் அடிப்படையான தமிழர்விரோதக் கொள்கையின் பிரதிபலிப்பாகவே உள்ளன.

விடுவிக்கப்பட்ட பகுதிகள் எனக் கூறிக்கொண்டு ஒரு நரகவாழ்க்கையை தமிழ்மக்களுக்குப் பரிசாக சிங்கள அரசு வழங்கிவருகின்றது என்பதே உண்மையாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

போராட்டமே தமிழினத்தின் வாழ்வு

காலத்தாயின் கருவறைக்குள் உயிர் பெற்றுவரும் 21ம் நூற்றாண்டு இன்னும் சில மாதங்களில் பிறக்கப்போகின்றது.

புதிய நூற்றாண்டை, அமைதி நூற்றாண்டாக ஆக்கிப்படைக்க உலகசமூகம் விரும்புகின்றது.

தேசிய இனப்பிரச்சனைகள் காரணமாக ஆயுதப் போர்களில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கங்களும் – போராளிஇயக்கங்களும் அமைதி வழியில் அரசியல்தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என, அது அறைகூவல் விடுக்கின்றது.

இலங்கைத்தீவின் இனச்சிக்கலுக்கு சமாதானவழி முறையில் நியாயமான – நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் இலக்குடன் சிங்கள அரசாங்கத்துடன் அரசியல் பேச்சுக்களில் ஈடுபட புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது.

கடந்த (1998, நவம்பர்) மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதான முயற்சிபற்றிய ஒரு தெளிவான கருத்தை முன்வைத்திருந்தார். சர்வதேச மத்தியஸ்தத்தையும் இதற்காக கோரியிருந்தார்.

ஆறுமாதங்கள் கடந்துவிட்ட இன்றைய நிலையிலும் தலைவரின் சமாதான அழைப்பிற்கு சாதகமாக சந்திரிகா அரசாங்கம் பதிலளிக்கவில்லை. இதற்குப்பதிலாக போர்க்கூச்சல்களே சிங்கள அரசின் பக்கமிருந்து தொடர்ச்சியாக வந்தவண்ணமுள்ளன.

அண்மையில், வன்னிக்கு வந்து புலிகளின் சமாதான நல்லெண்ணத்தைக் கண்டு திரும்பிச்சென்ற சிங்களத்தின் சர்வமதக் குழுவினரின் ஊடாகவும், போர் வெற்றி என்ற காட்டமான செய்தியையே, அம்மையார் பதிலாக வழங்கியிருந்தார்.

சொல்லுடன் அவர் நின்றுவிடவில்லை. புதிய நூற்றாண்டில் போரை, பூதாகரத்துடன் நடாத்துவதற்கான முன்னேற்பாடாக புதிய – புதிய ஆயுதங்களை படங்களை அம்மையாரின் அரசாங்கம் கொள்வனவு செய்து வருகின்றது.

படையினர் கைப்பற்றியுள்ள தமிழர் நிலத்தின் எல்லைகளை உதாரணத்திற்குக் காட்டவிரும்பும் சந்திரிகா அம்மையார், தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காணவேண்டும் முடியும் என்பதிலேயே நம்பிக்கையாக இருக்கின்றார்.

வன்முறையின் கொடூரத்தையும் – போரின் துயரத்தையும் உணர்ச்சி பூர்வமாக எடுத்துரைக்கும் – வலக்குத்திரட்டி அதி[illegible] காரத்தைக் கைப்பற்றிய அம்மையார், இப்போது, படையினர் ஆக்கிரமித்த தமிழர் நிலங்களை அடையாளம் காட்ட திறம் தீட்டப்பட்ட நிலவரைபடங்களை விரியோகித்து வாக்குவேட்டை நடாத்தி – ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்த முயல்கின்றார். பேச்சு வார்த்தைகள்மூலம் தீர்க்கமுடியாத பிரச்சனைகளோ இல்லை என்று சித்தாந்தம் பேசிய அம்மையார், இப்போது தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்கும் சர்வரோக நிவாரணி போர்தான்! என தத்துவம் பேசுகின்றார்.

போர் விளைவித்துவரும் பெருந்தொகையான உயிரழிவுகளைப் பற்றியோ – சேதமோ பொருண்மிய நாசத்தைப் பற்றியோ அம்மையார் சிறிதும் கவலைப்படவில்லை. சிறீலங்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலையும் வென்று – போரைத் தொடர அவர் திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

இதேவேளை, தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க தம்மிடம் நல்லதிட்டம் உள்ளது என – அடுத்த அரசாங்கத்தை அமைக்கத் துடிக்கும் ஐ.தே.கட்சி, அறைகூவல் அறிவிப்புகள் செய்கின்றது. அது என்ன திட்டம் என இன்றுவரை அது பகிரங்கப்படுத்தவில்லை.

முன்னைய ஐ.தே.கட்சி அரசாங்கம் போரை நடாத்தியபோது படையினருக்கு இந்த உயிரிழப்பு குறைவு என்றும், இப்போதைய பொ.ஐ.மு.முன்னணி அரசாங்கம் நடாத்துகின்ற போரில் பாரிய உயிரழிவுகளை படையினர் எதிர்கொள்கின்றனர் என எண்ணிக்கைகளை ஒப்பிட்டுக் காட்டி தமது அரசாங்கமே போரை திறம்பட [illegible]

[illegible] மேஜர் ஜெனரல் லக்கி அல்கம என்பவரே அந்த ஆலோசகராகும். கிழக்குமாகாணத்தில் சிங்களப்படை நடாத்திய தமிழ் இனப்படுகொலைகளில் முக்கிய பங்கு வகித்த பெரும்பங்கு ஐ.தே.கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் போர் நிறுத்தப்பட்டுவிடும் என எண்ணுவது மடமைத்தனமானது.

கொழும்பில் அரசாங்கங்கள் மாறினாலும் தமிழ்மக்கள் மீதான அடக்குமுறை ஆட்சியானது மாற்றமற்ற ஒன்று என்பது இலங்கைத்தமிழரின் அரசியல் வரலாறு.

தமிழரின் இனப்பிரச்சனையை அரசியல் வழிமுறைமூலம் தீர்க்கவேண்டும் என்ற பேரினவாதச் சிந்தனையே சிங்கள அரசின் நீண்டகால கொள்கையாகும். இந்த ஆட்சிக்கதிரையை ஒவ்வொரு பதவியில் அமர்ந்தபோதும் எந்த அரசாங்கமும், அரசின் போர்க்கொள்கையை தொடர்ந்து முன்னெடுக்கும். இந்த போர்க்கொள்கையை மாற்றியமைக்கும் துணிவும் ஆளுமையும் நேர்மையும் சிங்களத்தின் அரசியல்வாதிகள் எவர்க்கும் இல்லை என்ற உண்மையை தமிழ்மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்தநிலையில் தமிழீழமக்களாகிய நாம் ஒரு உண்மையை ஏற்றுக்கொண்டு செயற்படவேண்டும்.

தமிழீழமக்கள்மீது சிங்கள அரசு ஒரு நூற்றாண்டுப் போரைத் தொடுத்து – இன அழிப்பை நடாத்திக்கொண்டிருக்கின்றது.

இந்த இனஅழிப்புப்போருக்கு முகங்கொடுத்து – விடுதலை காணவேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் எமது இனம் உள்ளது. இந்த போரை எமது மக்கள் எதிர்கொள்வதுதான் வேண்டும்.

போரில் நாம் வெற்றிபெறுவதும் – நிம்மதியான, கௌரவமான, சுதந்திரமான எமது மக்களின் வாழ்க்கையும், பிரிக்கமுடியாதபடி ஒன்று கலந்துள்ளன.

எனவே சிங்களப் படையினர் எமது [illegible] அரசின் உயிர்களை நடு[illegible] மட்டுமே [illegible]

TAMIL EELAM புலிகளின் குரல்

நெடுநாள் வாடை

நாளைய நாளை...
[illegible]

– நா. முத்துநிலவன் (தமிழ்நாடு)

இனி வெடிப்பது எம்முறை



வே. பாலகுமாரன்

(11ஆம் பக்கம் பார்க்க)

வழித்தடம்

கிளிநொச்சி ஒரு கோட்டை நகரம். எப்போதும் தாக்கப்பட்டு அழிக்கப்பட முடியாது என நினைத்திருந்தனர். 1998, 27 தள்ளிவந்த நாளன்று சிங்களப் படையின் பின்னர் தடைகளை உடைத்தன புலிகளின் அணிகள்.

இது ஒரு நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல். "எம்மீது அவலத்தை விதைத்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடு" என்ற தலைவரின் தெளிவான சிந்தனைக்கேற்ப மக்களை இடம் பெயரவைத்து காடுகளில் பட்டினியால் வாழும் அவல வாழ்வை விட்டவனை எம் நிலத்தில் இருந்து துடைத்தெறிந்தனர்.

பல அணிகள் பங்கேற்ற இச்சமரில் முரளியின் தலைமையில் சென்ற அணியின் பணி சற்று முக்கியத்துவமானது; கடினமானது. முகாமைத் தாக்கி அழிக்கும் திட்டத்தில் அந்த முகாமிற்குக் கிடைக்கப்போகும் உதவிகளைத் தடுப்பதென்பது முக்கியமானது. குறைவான எம்பலத்தை வைத்துக்கொண்டு எம் தாக்குதல் உத்தி மேலாயங்களாலும், எம் போராளிகளின் உறுதியாலும் மட்டுமே எதிரியின் முகாமை அழிக்கத் திட்டமிடப்பட்டது.

கிளிநொச்சித்தளத்திலிருந்து பிரிவேட்டிற்கு பரந்தன் தளத்திலிருந்து கிடைக்கும் உதவியைத் தடுப்பதற்கான அணியை வெற்றிகரமாகச் செயற்பட வைக்கும் பணி அவர்களுடையது.

சண்டை தொடங்கி சிறிது நேரத்திலிருந்து எதிரி கடுமையான எதிர்ப்பை காட்டிக்கொண்டிருந்தான். எதிரியின் முன்னேற்றத்தை தடுக்கும் வகையில் கண்ணிவெடிகளை தொடர்ந்தான் எதிரி. எங்கோ முகாமின் உள்ளே நுழைவதற்குப் பாதை இல்லாத நிலை. எம்மவர் ஒருதப்பாதை அடைக்கப்பட்டிருந்த, எது நிகழும்?

விடமுடியாது. உதவியைத் தடுக்கும் அணியை தம் பணியைச்செய்யாது விட்டால் அன்றைய சண்டையில் நடக்கப்போவது என்ன? அதை முரளியின் அணியில் எல்லோரும் உணர்ந்திருந்தனர்.

அணிகள் முரளியால் மீள ஒருங்கமைக்கப்பட்டு, மீண்டும் தடைகளை உடைப்பதற்காக எதிரியை உக்கிரமான சண்டை நிகழ்ந்தது. சில காப்பரண்கள் கைப்பற்றப்பட்டுவிட்டன. இன்னும் சில காப்பரண்கள் மட்டுமே மீதிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தன. மீதிக்கப்பட்ட அரண்களிலிருந்து மீதிக்கப்படாத இடங்களுக்கு அணிகள் அனுப்பப்பட்டன.

வீரத்தின் வித்துக்கள்

அணிகளை ஒருங்குபடுத்தி அனுப்பிக்கொண்டிருந்த முரளியின் காலடியில் திடீரென மிதிவெடியொன்று வெடித்தது. எதிரியின் கடுமையான எதிர்ப்பின் மத்தியில் நிலத்தோடு நிலமாக வார்ந்து முன்னேறிக்கொண்டிருந்த முரளியின் முழங்காலை வைத்த இடத்தில் மிதிவெடி வெடித்தது. இரண்டு கால்களும் துண்டாடப்பட்டு சிதறிப் போயின. மணிக்கால்களும் துண்டாடப்பட்ட நிலையில் இரத்தவெள்ளத்தில் இருந்த முரளியை பின்னர் காவருகுமரனார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுவர்.

பின்னர் நடந்ததைப்பற்றி கூடவிருந்த போராளி கூறுகின்றான். "நாங்கள் மீண்டும் ஒரு தாக்குதலைத் தொடுத்து தடைகளைத்தாண்டி உள்ளே நுழைந்து கொண்டிருந்தோம். எம்மை ஒருங்குபடுத்தி அனுப்பிக்கொண்டிருந்த முரளி அண்ணாவின் காலடியில் எதிரி புதைத்த மிதிவெடியொன்று திடீரென முழங்கியது. நாம் கடக்கவேண்டிய பாதையல்ல அச்சிறு வழியில் நடப்பதை உணர்ந்தோம். நாம் பின்னாலும் வெடிக்கத்தயாராயிருந்த கண்ணிவெடி வலயங்களினூடு நாம் நகர்ந்துகொண்டு இருந்தோம். முன்னேயுள்ள கையபடுத்த வேண்டியதற்கு பாதுகாவலர்களின் காவல் அரண்களை தொடர்ந்து கைப்பற்றிக்கொண்டிருந்தோம். திடீரென முரளியண்ணாவின் குரல். எப்படி...? எனக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியாகவும் இருந்தது. வோக்கியில் அவரின் குரல் களைத்திருந்தது. ஆனால் உறுதியாய் இருந்தது.

'மச்சான் என்னைப்பற்றிக் கவலைப்படாதேயுங்கோ. எங்கடபகுதியை பிடிக்கவேணுமென்ரோ. அது போதும்' வோக்கியில் கூப்பிட்ட முரளி அண்ணாவின் குரல் இப்படித்தான் சொன்னது. பின்னர் எங்கோவோடு நின்ற காயப்பட்டுச்சென்ற போராளி சொன்னான். "கள மெடிசினில் முதல் முதல் மயக்கம் தெளிந்த முரளி தனது வோக்கியைக் கண்டேட்டு எடுத்து தனது அணியுடன் கதைத்தான். ஆனால் இந்த ஒருமுறை கதைப்பதற்கே.

அங்கே களத்தில் உள்ள நிலைமையை அறிவதற்கே முரளியின் உடலில் உயிர் இருக்கவில்லை."

இரண்டு கால்களும் இழந்த நிலையில் மரணத்தின் விழிம்பிலும், வேதனையின் உச்சத்திலும் இருக்கக்கூடிய அவன் உயிர், மயக்கம் தெளிந்ததும் "ஐயோ" என கத்தவில்லை. தன் அணியை உற்சாகப்படுத்தும் உறுதியிலிருந்தது. அந்த உன்னதமான உயிரின் உணர்வுகள் எத்தனை அற்புதமானவை. அசாத்தியமான அவனின் உறுதி அவ்விடத்தில் அந்நேரத்தில் ஒரு சம்பவந்தான். ஆனால் எமது சரித்திரத்தில் அது ஒரு பதிவு.

- அன்பு -

"ஒரு போரின் வெற்றியை தீர்மானிப்பது ஆட்பலமோ - ஆயுதபலமோ அல்ல. அசைக்கமுடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்" என்ற தலைவரின் உணர்வுகளை உள்ளத்தில் கலந்து வாழ்ந்த இலட்சிய வீரன் இவன். இவனதும் இவன்போன்ற புலிவீரர்களினதும் உறுதிதான் வரலாற்றில் எமது நாட்டின் வெற்றிகள்.

மண்கிண்டி, கிளிநொச்சி 25 இராணுவ முகாம் அழிக்கப்பட்டது. [illegible]

★ ★ ★

ஜயசிக்குறுப் படைகள் நம் நடவடிக்கை தொடங்கி ஓராண்டை அண்மித்துவிட்ட நேரமது. வெற்றி நிச்சயம் என வந்தவர்களின் வெற்றிகள் கேள்விக்குரியான காலமது. இராணுவம் தேடியது ஒரு உடனடி வெற்றியையே. இராணுவத்தை பகடைக்காயாக்கிவிட்ட அரசிற்கு வேண்டியது ஒரு வெற்றிச் செய்தியே. அரச படைகளை எதிலும் நோக்கி ஏவிவிட எம்மிடம் அடிவேண்டி படைகள் பின்புறமும் ஓடமுடியாமல் திண்டாட, மீண்டும் மீண்டும் ஒரு இராணுவ வெற்றியை அரசியல் தேவைக்காகக் காட்ட அவர்கள் முயன்றனர்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

போர் எந்தக்கட்டத்தில் உள்ளது!

வலிகாமப் பெருநிலப்பரப்பில் சிங்களப்படை, அகலக்கால்பரப்பி நிலம் விழுங்கிவரும் இந்தக் கட்டத்தில் தமிழ் மக்கள் அனைவரும் விளக்கம்பெற விரும்பும் விடை இது. போர் எந்தக் கட்டத்தில் உள்ளது?

[illegible]

புலிகள் இயக்கத்தின் வீரமும் போரிடும் ஆற்றலும் உலகப்புகழ் பெற்றவை.

[illegible]

\- எல்லாளன் -

[illegible]

எங்கள் பட்டினிக்கு பதில் என்ன?
200 நாள் தொடரும் உண்ணாவிரதம்

— அ. தீபன் —

வீடமைப்புத்திட்டம்	செலவு செய்த தொகை (மில்லியன் ரூபா)
ஜனஉதவ நிகழ்ச்சித்திட்டம்	142
கிராமிய வீடமைப்புத்திட்டம்	190
சேவன வீடமைப்பு	118
நகர வீடமைப்பு	16
இடர் வீடமைப்பு	04
மீன்பிடி வீடமைப்பு	10

அட்டவணை (1)
குறிப்பு:- இவற்றைவிட வீடமைப்புகடனாக 8, 435 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

அட்டவணை (ii) 01. 07. 1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரண வெட்டினால் நிவாரணம் மறுக்கப்பட்ட குடும்பங்கள்

மாவட்டம்	வழங்கப்பட்டவை குடும்பங்கள்	01. 07. 98 முதல் வழங்கப்படும் குடும்பங்கள்	நிவாரண வெட்டுக்குள்ளான குடும்பங்கள்
கிளிநொச்சி	18, 857	8, 889	9, 968
முல்லைத்தீவு	32, 869	13, 333	19, 536
மன்னார்	17, 169	4, 444	12, 725
வவுனியா	8, 599	5, 566	3, 033
மொத்தம்	77, 494	32, 232	45, 262

[illegible]

அட்டவணை (iii) நடைமுறையிலுள்ள நிவாரண வெட்டு நடைமுறையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்

மாவட்டம்	1998.07.01 இற்கு முன் நிவாரணம் பெற்ற குடும்பங்கள்	1998.07.01 முதல் வழங்கப்படும் குடும்பங்கள்	1998.12.01 முதல் மேலதிகமாக நிவாரணம் பெறும் குடும்பங்கள்	1998.07 இற்கு முன்னருள்ளபடி பாதிப்புற்ற குடும்பங்கள்	ஏனைய 1,2 நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த நிவாரணம் மறுக்கப்பட்ட குடும்பங்கள்
கிளிநொச்சி	18, 857	8, 889	6, 346	4. 822	2, 127
முல்லைத்தீவு	32, 869	13, 333	8. 619	10, 917	799
மொத்தம்	51, 726	22, 222	13, 765	15, 739	2, 926

[illegible]

வன்னிக்களத்தில் புலிகளும் தேர்தல்களத்தில் 'ரணகோஷ'வும்

[illegible]

- கு. கவியுகன் -

[illegible]

[illegible]

(11 ஆம் பக்கம் பார்க்க)

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுதெறிந்த...

[illegible]

(94ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரத்தின்...

20 சித்திரை 1998இல் ஒரு காலைப்பொழுது!

எதிரி ஊர்க்குளத்தை எப்படியும் அன்று பிடித்துவிடவேண்டும் என்ற முடிவோடு இருந்தான். இதற்காக ஒலுமடு பகுதியூடாகவும், கனகராயன் ஆற்றுப்பகுதியாலும், மூன்றுமுறிப்பாலும் எதிரி சண்டையைத் தொடக்கியிருந்தான். எம் போராளிகள் சிலரின் சாவே அவனுக்கு அவனது இலக்கையெட்டும் நிலையை ஏற்படுத்தப் போதுமானதாக இருந்தது.

ஆம். சில பத்துப்போராளிகளே காவல் நின்ற எம் காவலரண் தொடரில் ஒரு பகுதியை நோக்கி ஒன்றல்ல, இரண்டல்ல பல டாங்குகள் அணிவகுத்து முன்னேறின. முன்னேறுவது, பின்னர் தரித்து நின்று எம் நிலைகள்மீது அடிப்பது, பின் முன்னேறுவது என எதிரி டாங்குகள் முன்னேறிக்கொண்டிருந்தன.

[illegible]

கரும்புலி லெப். கேணல் சுபேசன் / கிள்ளிவளவன்

மருதலின் அல்வின்

மன்னார்

பிறப்பு : - 02. 07. 1972

இலக்கு : - 10. 02. 1999

சகோதரர்கள் : - ஒரு அண்ணனும் 03 அக்காவும் 04 தம்பியும், ஒரு தங்கையும்

போராளியின் குருதிச்சுவடுகள்

விழுதெறிந்த விருட்சத்தின் வெளித்தெரியா வேர்கள்

(09 ஆம் பக்கம் பார்க்க)

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி வெல்வது ..

களை பறித்தெடுத்தார். கொசோவோவின் மிகச்சிறிய அளவில் வாழ்ந்த (கொசோவோவின் மொத்த தொகையான 02 மில்லியனில் 1.8 மில்லியன் கொசோவோ அல்பேனிய இனமக்களே. மிகுதியே சேர்பியர்) சேர்பியரைத் தூண்டி இனப் படுகொலையைத் தொடர்ந்தனர். இத்தகைய கொடுமைகளுக்கு வரலாற்றினை வேறு வகிர் தன்னைக்கு அழைக்கின்றார் 600 ஆண்டுகளுக்குமுன் கி.பி 1389இல் கொசோவோ களத்தில் துருக்கிய இஸ்லாமியர் வெற்றி பெற்றதனால் தம்மை தோற்கடித்தமைக்கு பழிவாங்க அலையும் சேர்பியர், துருக்கிய ஒட்டோமன் சாம்ராஜ்யத்தின் ஆட்சியின் விளைவாகத் தோன்றிய கொசோவோ அல்பேனியரை தமது விபரீத பணிகளுக்கு பலி பார்க்கின்றனர். புனிதமும் தொன்மையும், கொசோவோவை வளர்ப்போம் எனக்கூறி பேரினவாதம் நிலை வளர்க்கும் இவர்கள் போக்கினை இன்றைய பொருத்த பேரினவாத வெறியோடு ஒப்பிட்டும் பாருங்கள்.

சேர்பியர்கள் அட்டூழியங்களுக்கு எதிர்வினையாக 1996இல் K.L.A எனப்படும் கொசோவோ விடுதலைப்படை உருவாகி சேர்பியர் மேல் தாக்குதல்களை தொடங்கியது. கொசோவோ மக்கள் தமது தாயகத்திற்காக போராடினார்கள். 1997, 1998 களில் சேர்பியரின் படுகொலைகள் எல்லை மீறின. நாளுக்கும் புறந்தே நடக்கும் கொடுமைகள் நன்கு அமைவதற்கு அருகைத் தடுக்க போர்கள் பகுதியில் தமது முகத்தை நீட்டி. மேனான்மையை நிலைநாட்ட அமெரிக்கா நேரடியாக நேட்டோ துணையோடு தலையிட்டது.

1998 அக்டோபரில், ஹொல்புரூக்ஸ் பேசும் கோல்புரூக்கை தூதராக அனுப்பி மிலோசவிச்சோடு உடன்படிக்கை அமெரிக்கா செய்த போதும், அதனால் ஏற்பட்ட அமைதி சில மாதங்களே நீடித்தது. இறுதியாக, அண்மையில் பிரான்சின் ரம்புலேயில் நடைபெற்ற பேச்சுக்களையும் மிலோசவிச் எல்லாவற்றின் எடுக்கவில்லை. இதைக்கொண்டு அமெரிக்க - நேட்டோ தரப்பு இராணுவம் கூட தலைநகரில் வாமல் சேர்பியரை தண்டிக்க தொடங்கி விட்டது. பொருளியல் நடை, தரைப்படை பறுப்பன எனவே இப்போது நீங்கு.

இந்தப் பின்னணியில்தான் நம் மக்கள் உலகின் மனச்சான்றை உலுக்கத் தொடங்கியுள்ளனர். புதிய நூற்றாண்டிற்குள் புகுந்தவேளை உலகம் பிரவேசிக்க ஆயத்தமாகையில் வரலாற்றின் பாவக்கறைகளைக் கழுவி பின்னோக்கி முன்னேறும் சேர்பியரை ஒருமையாக தண்டிக்கும் உலகம் அதேவழக்கைமைகளை காக்கும் சிங்கள பேரினவாதிகளுக்கு துணை போவது ஏன்? இக் கேள்வியை மட்டுமே வைத்தான் எழுப்புகின்றனர் ஏனெனில் சிங்கள பேரினவாதிகளைத் தண்டிக்கும் பொறுப்பை ஆளர்கள் தம் கையில் எடுத்து விட்டனர். எம் மக்களின் விடுதலையுணர்வின் உணர்வுறுதியின் வெளிப்பாடாக நாளைக்கும் எந்தனை வர், அதனாலன்றோ உலகைப் பார்த்து இவ்வாறு சொல்கின்றனர்.

" வாழ்வது ஒருமுறை
வருவது ஒருமுறை
வெல்வது இனித்தான் "

உயிர்த்த பாடல்

எத்தனை எத்தனை பாடல்கள் மூழ்கிற்றன பூமியில்.
ஒவ்வொரு பாடலும்
அதனதன் இயல்பில்
அழகழகாய் கலையின் வரத்தில்.

நித்தியமும் பாடலொன்று இருந்ததாம் என்றுமொரு
முன்பொரு காலத்தில்,
மரபுணர்வுடனே பாடியிருந்தனவாம் பறவைகள்,
பருவகாலங்களில் மிதந்துவந்த பறவைகளும்
பாடல் மாற்றி
திசையெங்கும் வாலிபவாய் தெளிவு.

பாவொரு உயிர்மூச்சு
குருவினை நடைப் பாடல்
பிறிதொரு காலத்தில் குமிழ்ந்துபோயிற்று.
மெலிந்து மெலிந்து ஏதோ கண்டிற்று.
தெள்ள ஒட்டி
சரீரம் வெறித்தும் அதிதம் பிறிதிற்று.
பின்பு
அதன் காலமே இல்லாமல்
மௌனத்தில் உறைந்தது பாடல்
எங்கிலும் பாடல்.

வல்லமையான காலத்தில்
எங்கும்மேலொரு பாடல் இருந்ததாம்
வல்லுனர் சொல்லின
தந்துதிப்புகளுக்கும் பொருள்கிர்த்து
சோர்ந்தீப் புலம்பில் செழுமைபெறும்.
பாடல் பற்றிய கதையே ஒரு பாடலாயிற்று.
பிறிதொன்று
அமைவே பாடியிருந்ததாம் உண்மைப் பாடல் மறந்து.

காத்திருந்த கல்லிடை வந்த நிருபமாதமேனை
வாய நிமல பெருமௌனச் சாபம்
உடைந்தெழுந்த.
ஒரு ஆதியின் ஓங்காரத்தும்
ஓராயிரம் நாள் இழந்த வலிதாய்
நெடுக்கோலித்து கட்டிடமினை
கவிதெழுந்து செவிப்பறை.
உறைந்த பாடல்
உச்சாந்தாயியில் உருவெழுந்தது.
சுத்த சரீரம் நெஞ்சுயர்த்த
ஆடுமேதர்த்தது ஆருயிர்,
புரியலாய்த் தழுவற்று நாவெல்லாம்.

நுனைவீரல் நம்பல் காற்றிருந்த
தொலைவிட நரம்புகள் புடைக்க
ஓங்கெழுந்தி நீயும் பாடினேன்
உனது பாடலை.
வாலிடை அதன் வெளிபெனலாம்
நிரூபணம் அதன் சிரமேன்றாதி
பூமி திசையெல் பாடு
உயிர்த்த பாடலை.
பாடலற்ற காற்றினுக்கும் நாலித்துவாரங்கள் எதற்கு!

- எஸ். உமாஜிப்ரான்

(ஓவியம்: வீரசந்தனம்)

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்னிக்...

இரண்டு வருடத்தில் புலிகளின் பீரங்கிப் படையின் உருவாக்கமும், வளர்ச்சியும் வன்னிச்சமர்களைத் தீர எதிர்க்கும் பெரும் சவாலாக அமைந்தது. புலிகளின் பீரங்கி வேவுகளையிட்டு எதிரி தரப்பு அச்சமடைந்துள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ள இராணுவத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தியது மட்டுமல்லாது அதன் முக்கிய பகுதிகள் அமைந்துள்ள குமேத்துவம் கருதிக் குறிவைத்துத் தாக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான நவீனமான தாக்குதல் புலிகளால் எப்படி சாத்தியம்? என்பதே எதிரிகளிடத்தெழும் கேள்வியாக இருக்கிறது.

புலிகளின் பீரங்கிப்படையணியின் அசாதியமான ஆற்றல் வன்னிச்சமர்க்களத்தின் தீர்மானத்திற்கு பலிகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும். புலிகளின் இத்தாக்குதலால் இராணுவத்தரப்பு முன்பிருந்த திட்டத்தைக் கைவிட்டு புதுமுகம் நுழைந்திலிருந்து மடுவினூடாக மறுபடியும் முன்னேறும் முடிவை எடுத்தது. முன்னேறும் இராணுவத்தை ஆள் இழப்பற்ற வகையில் மடுத்தேவாலயத்தின் தாண்டிஇருக்கும் திட்டத்தோடு நடவடிக்கைகளை எமது அணிகள் ஏற்பாட்டு வேலைகளில் இறங்கின.

மடுத்தளத்தின் பேராயர் வணபிதா இராயப்பு யோசப் அடிகளார் கனமுனைத் தலைமையிடம் " மடு ஒரு புனிதத் தலம். இந்த மடுப்பிரதேசத்தின் சுற்றுச்சூழலில் ஒரு தாக்குதல் நடவடிக்கையால் இரத்தக்களரி ஏற்படுவதை நான் விரும்பவில்லை. இதைத் தவிர்க்கவும் " என்று கேட்டதற்கு இணங்கி, எமது தலைவரின் பணிப்பின்பேரில் எமது அணிகள் தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டு மடுப்பிரதேசத்தைவிட்டு பின்வாங்கின.

இப்போது இராணுவம் மடுப்பிரதேசத்தை ஆக்கிரமித்து மடுப்புனிதத்தலத்திற்கு பங்கம் விளைவித்து வருவதாக பேராயர் அரசு செந்திற்கு. இராணுவத்திடம் சந்திரிகாவிற்கும் இதுபற்றி மடுவுக்கு அனுப்பியுள்ள தாகத் தெரிவித்துள்ளார். ஆனால் அரசோ புலிகள் மீதான பழியையும் வெற்றியாக இதைக் கருதிக்கொண்டது. மேற்கத்தேயர்களின் மதவழிபாட்டு உரிமையைப் பெற்றுக்கொடுத்ததாக பீற்றிக்கொண்டது.

ஆனால் ஆக்கிரமிப்பின் முன்பு இந்தியாவைப்பற்றிற்கு எவரும் வந்து தொழுகை நடத்தவோ, மதநடைமுறைகளில் ஈடுபடவோ சிங்கள மக்களுக்கும் கூட புலிகள் என்றும் தடைவிதித்ததில்லை.

இவ்வாறிருக்க மடுப்பிரதேச ஆக்கிரமிப்பைப் புலிகள் மீதான வெற்றியாகவும், புனித தலத்தை மீட்டதாகவும் அரச கூறுவதின் அர்த்தம் என்ன இருக்கிறது? சிங்களவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வேண்டி நாடகத்தைத் தவிர.

" ரணகோஷ " நடவடிக்கையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் புலிகளின் " விசேட தாக்குதல் அணி " இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இப்பகுதிகளில் மட்டும் மே 14 வரையிலான நாட்களில் மொத்தம் 85 பேரை இராணுவ தரப்பு இழந்துள்ளது. இதில் 59 பேர் மன்னாரிலும், மிகுதிப் பேர் வவுனியாப் பிரதேசத்திலும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான எதிர்வினைகளில் தோற்றுப் போகக் கூடிய வகையில் செய்யப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் வருங்காலத்தில் சந்திக்க இருப்பது என்ன? இந்த நடவடிக்கையால் வன்னிச்சமர்க்களத்தில் புலிகள் ஏற்படுத்தப்போகும் மாற்றம் என்ன? இராணுவமும் அரசும் பொறுத்திருந்துதான் கண்டு கொள்ளவேண்டும்.

அடங்காமண்ணுக்கு விலங்கிடத்துடிப்பவனே உன்னைப்பார்த்து அழுவதா? சிரிப்பதா?

[illegible]

உலைக்களம்

- வியாசன்

[illegible]